முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி கார்த்திகை மாதம் 2ம் திகதி முதல் கார்த்திகை மாதம் 9ம் திகதி வரை**
**நவம்பர் 18ம் திகதி முதல் நவம்பர் 25ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. **ஞானவான்கள் துணை கொண்ட**
   **ஞான பூமி பாரத தேசமே**
   **வானவர்கள் மகிழ்ந்து அருளும்**
   **வள்ளல் பூமி செந்தமிழகமே**
2. **தமிழகம் இந்தியா புவிதன்னில்**
   **தக்க விளம்பி தேள் திங்களில்**
   **நேமமுடன் உபய திகதி மேல் நவதிகதி வரை**
   **(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 2ம் நாள் 18.11.2018, ஞாயிறு முதல் கார்த்திகை மாதம் 9ம் நாள் 25.11.2018, ஞாயிறு முடிய)**
   **நடக்கும் நிகழ்வாக எதிர்கால பலனை**
3. **பலனை சுப்பிரமணியர் யானும்**
   **பாடிடுவேன் வார ஆசி பலனாக**
   **கலைத்துறைகள் வழிகள்தனிலும்**
   **கட்டுப்பாடுகள் அரசவழி அணுகும்**
4. **அணுகும் பேச்சுரிமை எழுத்துரிமைகளை**
   **அடக்கும் வண்ணம் செயல் மீறும்**
   **ஞானமிலா ஆளுமை செயல்கள்**
   **நல்தமிழக பெருமைக்கு தொய்வு தரும்**
5. **தரும சிந்தையிலா தன்னல போக்கை**
   **தலைமைகள் மாற்றி சேவை வழி**
   **தருமம்பட ஆளுமை நிமிர்ந்ததால்தான்**
   **தமிழகம் தன் பெருமை காக்கும்**
6. **காக்கும் மக்களின் நலமுடன்**
   **கண்ணியத்தையும் போற்றும் ஏற்றும்**
   **ஆக்கமிலா ஆடம்பர விழாக்கள்**
   **அத்தியாவசியமிலா திட்டங்கள் தன்னை**
7. **தன்னையே தவிர்த்து செயல்பாடு**
   **தன்னார்வ சேவை நோக்கில்**
   **அன்னை தேசமும் தமிழகமும்**
   **ஆளுமை கொண்டால்தான் உலக அளவில்**
8. **உலகளவில் இந்தியா தமிழகம்**
   **உயரும் தலைநிமிரும் என்பேன்**
   **கலகமிடரில்லா பூமியாக சிறக்க**
   **கலவர இன மத பேதமில்லா**

9. பேதமில்லா ஆளுமை பலமுற
   பேதமற ஞான வழி புகட்டும்
   மேதகு ஞானி ஆறுமுக அரங்கன்
   மேலான ஞான வழிகளை ஏற்றுவர
10. வருகவே இந்தியா தமிழகத்தில்
   வள்ளல் தன்மை பெருகி
   ஆறுமுகன் என் தயவுபடவே
   ஆக்கமுடன் வளர்ச்சிகள் மேம்படும் வார ஆசி நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 2ம் நாள் 18.11.2018, ஞாயிறு முதல் கார்த்திகை மாதம் 9ம் நாள் 25.11.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் தமிழகத்தில் இந்தியாவில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

ஞானம் பெற்று முற்றுப்பெற்ற ஞானவான்களான ஞானிகளின் துணையை உடைய ஞானபூமி பாரததேசமே வானவர்களாம் ஞானிகளெல்லாம் மகிழ்ந்து அருள் செய்கின்ற வள்ளல் பூமியாகிய செந்தமிழ் உடைய தமிழகமே, தமிழகம் மற்றும் இந்தியாவில் விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 2ம் நாள் 18.11.2018, ஞாயிறு முதல் கார்த்திகை மாதம் 9ம் நாள் 25.11.2018 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

தமிழக அரசு கலைத்துறையில் சில கட்டுப்பாடுகளை விதிக்கும். மக்களின் பேச்சுரிமை, எழுத்துரிமைகளை அடக்கும்விதமாக அரசு செயல்மீறி செயல்படும். தமிழக அரசு வகுக்கும் சில முடிவுகளால் தமிழகத்தின் பெருமைக்கு தொய்வு உண்டாகும்.

ஆட்சி பொறுப்பில் உள்ளோர் தலைமை பொறுப்பில் உள்ளோர் தருமசிந்தை இல்லாமல் செயல்படுகின்ற தன்னலமான போக்கினை மாற்றிக் கொண்டு சேவை வழியில் சென்று தருமசிந்தையோடு ஆட்சி புரிவோர் துணிவுடன் செயல்பட்டால்தான் தமிழகம் தமது பெருமையை காப்பாற்ற முடியும்.

காக்க வேண்டிய அரசு மக்களின் நலங்களை காத்திடவேண்டும். மக்களின் கண்ணியத்தையும் நலனையும் போற்றி காப்பதுடன் மக்களின் முன்னேற்றத்தில் கவனம் கொள்ள வேண்டும். எந்தவிதமான பலனையும் தராத விழாக்கள் மற்றும் மக்களுக்கு அத்தியாவசிய தேவைகள் இல்லாத திட்டங்களை தவிர்த்து செயல்பட வேண்டும். தன்னார்வ சேவையுடன் இந்திய தேசமும் தமிழகமும் ஆட்சி செய்யப்பட்டால்தான் உலக அளவில் இந்தியாவும் தமிழகமும் மேன்மையடைந்து உயர்வான நிலைக்கு வரும். தமிழகமும் இந்தியாவும் உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கும்.

கலகங்கள், கலவரங்கள் இல்லாத பூமியாக இந்தியா சிறப்புற இன, மத, பேதங்கள் இல்லாத வகையில் அரசு நடந்திட பலமான ஆட்சி நடந்திட வேண்டுமாயின் பேதாபேதமின்றி ஞானவழி புகட்டும் மேன்மைமிக்க ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் அற்புத ஞானவழிகளை ஆட்சி புரிவோர் ஏற்று செயல்பட இந்தியாவிலும், தமிழகத்திலும் வள்ளல் தன்மை பெருகி முருகப்பெருமான் எனது தயவுபட ஆக்கமும் ஊக்கமும் பெருகி வளர்ச்சி பணிகள் அதிகமாகி இந்தியாவிலும் தமிழகத்திலும் மேன்மையான நிலையை அடைந்து சிறப்படைவார்கள் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–